1974 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. மு. **கண்ணப்பன்:** (அ) & (இ) திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் திருக்கோயிலின் தங்கக் கலசம் திருடப்படவில்லை. ஆனால் மேற்படி கலசத்திலிருந்து சுமார் 360 கிராம் எடையுள்ள தங்கம் சுரண்டி திருடப்பட்டுள்ளது. இத்திருட்டுப்பற்றி காவல்துறையிடம் புகார் செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

அமைச்சரவையிலிருந்து விளக்கம் கோரல்

திரு. கோவை செழியன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். தங்கள் அனுமதியோடு ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வந்துள்ளேன். ஏற்கனவே இந்த மன்றத்திலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களை ஒரு விளக்கம் கேட்டபொழுது, இரண்டு நாட்கள் கழித்துச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவையிலே உள்ள மாண்புமிகு சத்தியவாணிமுத்து . . .

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. வேறு நேரத்தில் கேளுங்கள்.

திரு. கோவை செழியன்: நான் சொல்வதைக் கேளுங்களேன். எதிலே வருகிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. மற்றைய விதிமுறைகளைப் பாருங்கள் . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு **பேரவைத் தலைவர்:** அது சம்பந்தமாக இது சம்பந்தமாக என்று இங்கே வந்து சொல்லிவிட்டால் தலைவர் முடிவு எடுப்பதற்கு முன்னால் அதை அவையிலே எழுப்பியதாகிவிடும். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. நான் இப்படிக் கொடுத்திருக்கிறேன், என்ன ஆயிற்று என்று அவையிலே கேட்பதுகூட முறை அல்ல.